பதிப்புரிமை ஆசிரியருக்கே / *All Rights to Author*

# GEOGRAPHY EXAMINATION

## தரம் 06

## முதலாம் தவணைப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்
## First Term Examination - Model Paper

புவியியல் I,II
Geography I,II

இரண்டு மணித்தியாலம்
Two hours

ஆசிரியர்: ஏ.கஜன் B.A Tamil
077 2400 707 / 076 8044 959
மல்லாவிக் கஜன் (ஆதித்தியன்)
Group e.way தமிழ்வழி

தமிழ் இனிது கல்வி நிலையம்
பாலிநகர், வவுனிக்குளம்
புவியியல் ACCOUNTING WORLD
2ஆம் குறுக்கு வீதி, மல்லாவி
புவியியல், தமிழ் பிரத்தியேக வகுப்புக்கள்

சுட்டெண்: ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **பகுதி I, பகுதி II** என **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி I** மற்றும் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி I மொத்தப் புள்ளிகள் [ ]

பகுதி II மொத்தப் புள்ளிகள் [ ]

இறுதிப் புள்ளிகள் [ ] **100**

## பகுதி / Part - I

- **1 – 5 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

**1.** வெப்பத்தை வழங்குகின்ற **பிரதான** இயற்கை ஒளி முதல்.
(1) சந்திரன் (2) மின்சாரம் (3) விண்மீன் (4) சூரியன்

**2.** அருகில் படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தினைப் பயன்படுத்தி அளவிடப்படுவது.



(1) வெப்பநிலை
(2) மழைவீழ்ச்சி
(3) காற்றின் வேகம்
(4) மூடுபனி

**3.** இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு **உரித்தற்ற** மாவட்டமாக **அமைவது.**
(1) யாழ்ப்பாணம் (2) காலி (3) கிளிநொச்சி (4) முல்லைத்தீவு

**4.** அதிக மழைப்பொழிவு காரணமாக ஏற்படவல்ல **பிரதான** அனர்த்தமாக **அமைவது.**
(1) மண்சரிவு (2) வெள்ளப்பெருக்கு (3) வரட்சி (4) மின்னல்

**5.** பின்வருவனவற்றுள், பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கும் இயல்புடைய உயிர்வகை.
(1) தும்பி (2) மண்புழு (3) கறையான் (4) செண்பகம்

- **6 – 10 வரையான வினாக்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடையினை, அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மேலே எழுதுக.**

**6.** பாடசாலை அமைந்துள்ள மிகச் சிறிய நிர்வாக அலகு...........................ஆகும்.
**(கிராம உத்தியோகத்தர் பிரிவு / பிரதேச செயலாளர் பிரிவு / மாவட்டச் செயலாளர் பிரிவு)**

**7.** பின்வருவோரில், வானிலை அறிக்கையை அவதானிக்க வேண்டிய நபர்.........................ஆவார். **(**வைத்தியர் / ஆசிரியர் / மாலுமி**)**

**8.** வெப்பமானியில் வெப்பநிலை கூடிக் குறைவதற்கு .........................பயன்படுத்தப்படுகின்றது. **(**புரோமின் / பாதரசம் / எத்தனோல்**)**

**9.** இலங்கை.....................................பெறப்படும் தரவுகளால் வானிலை அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. **(**வளிமண்டலவியல் திணைக்களத்தினால் / காலநிலை ஆய்வு மையத்தினால் / வானிலை அவதானிப்பு நிலையத்தினால்**)**

**10.** வானத்தில் முகில்கள் இல்லாத வேளையில் ..........................நீல வானத்தை அவதானிக்க இயலும். **(**தெளிவான / மங்கலான / கருமையான**)**

✹ **11– 15 வரையான வினாக்களை வாசித்து, அவை சரியாயின் 'சரி' எனவும், பிழையாயின் 'பிழை' எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

**11.** காற்றுத் திசைகாட்டியைப் பயன்படுத்தி காற்றின் வேகம் அளவிடப்படும். **(.........)**

**12.** உயிரினங்களின் நிலைத்திருப்புச் செயற்பாட்டிற்குத் தாவரங்கள் மிகவும் முக்கியமானவையாகும். **(.........)**

**13.** சிங்கள தமிழ் சித்திரைப் புதுவருட காலத்தில் குயிலின் ஓசையைக் கேட்க முடியுமாயிருக்கும். **(.........)**

**14.** ஒவ்வொரு சூழலிலும் தென்படும் வானிலை நிலமைகள் ஒன்றுக்கொன்று ஒத்த தன்மையுடையவையாகக் காணப்படுகின்றன. **(.........)**

**15.** சமூகத்தின் முக்கியமான செல்வங்களாக இளைஞர்கள் கருதப்படுகின்றனர். **(.........)**

✹ **16 – 20 வரையான வினாக்களுக்கு, (அ) பகுதிக்குப் பொருத்தமான விடையை (ஆ) பகுதியிலிருந்து தெரிவு செய்து, அதன் ஆங்கில எழுத்தை அடைப்புக்குறிக்குள் இடவும்.**

| | | |
|---|---|---|
| **16.** வானிலை நிலமைகளில் ஒன்று. | **(....)** | **A-** காவியுடைக் கள்ளி |
| **17.** நீராவியானது ஒடுங்கல் நிலையை அடைந்ததும் உருவாகுவது. | **(....)** | **B-** மாவட்டம் |
| **18.** இடம்பெயர் பறவைகளில் ஒன்று. | **(....)** | **C-** மூடுபனி |
| **19.** மிகப் பெரிய நிர்வாகப் பிரிவு. | **(....)** | **D-** மாகாணம் |
| **20.** சுற்றாடலுக்கு அழகு சேர்க்கும் பறவை. | **(....)** | **E-** முகில் |
| | | **F-** கிளி |

**(20 X 2 = 40 புள்ளிகள்)**

## பகுதி / Part – II

✹ **முதலாம் வினா கட்டாயமானது.**
✹ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையெழுதுக.**

**01.** **கீழே தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினை அடிப்படையாகக் கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**(1)** ஊவா மாகாணத்திலுள்ள ஒரு மாவட்டத்தை இனங்காட்டும் **ஆங்கில எழுத்து.** **(....)**

**(2)** வடக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மாவட்டத்தை இனங்காட்டும் **ஆங்கில எழுத்து.** **(....)**

**(3)** இலங்கையில் மிகவும் உயரமான மாவட்டத்தை இனங்காட்டும் **ஆங்கில எழுத்து.** **(....)**

**(4)** இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ள மாவட்டத்தை இனங்காட்டும் **ஆங்கில எழுத்து.** **(....)**

**(5)** வவுனியாவிற்குத் தெற்கிலுள்ள மாகாணத்தை இனங்காட்டும் **ஆங்கில எழுத்து.** **(....)**

**(6)** சப்ரகமுவ மாகாணத்தின் மிகப்பெரிய மாவட்டத்தை இனங்காட்டும் **ஆங்கில எழுத்து.** **(....)**


Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination




(12 புள்ளிகள்)

02. கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.




1) வைத்தியசாலைக்கு அருகிலுள்ள சோமு, தனது மகனை அழைத்து வருதற்காகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. சோமுவிற்கு எத் திசையில் பாடசாலை அமைந்துள்ளது?

2) அங்கவீனமுற்ற நிலையிலிருக்கும் சேகர், வைத்தியசாலைக்கு வருகை தரவேண்டுமாயின், வரைபடத்தின் எப் பகுதிக்கு இடம்பெயர்தல் வேண்டும்?

3) ராமு, தனது வீட்டிற்குச் செல்ல எத்திசையில் பயணிக்க வேண்டும்?

4) **A** என்ற நபருக்கு எத்திசையில் வங்கி அமைந்துள்ளது?

5) வீட்டிற்கு எத் திசையில் **A** என்ற நபர் தரித்து நிற்கின்றார்?

6) பாடசாலைக்குத் எத்திசையில் ராமு நிற்கின்றான்? (12 புள்ளிகள்)



Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination

**03.1)** நீர் வதியும் கிராமம் அமைந்துள்ள மாவட்டம் **மற்றும்** பிரதேச செயலாளர் பிரிவு என்பவற்றை **முறையே** குறிப்பிடுக.

**2)** பிரதேச நிர்வாகப் படிமுறையில், மாவட்டங்கள் எவ்வாறு உருவாக்கம் பெறுகின்றன?

**3)** உமது பாடசாலையின் மாதிரி வரைபடத்தை வரைந்து காட்டுக. **(12 புள்ளிகள்)**

**04.1)** **உப திசைகள்** நான்கும் எவை?

**2)** திசையை அறிந்து கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் **இரண்டு** தருக.

**3)** இயற்கையான முறையில் திசையை அறிந்துகொள்ளும் முறையை எழுதுக. **(12 புள்ளிகள்)**

**05.1)** **வானிலை** என்றால் என்ன?

**2)** வானிலை மூலகங்கள் **நான்கு** தருக.

**3)** வானிலை பற்றிய தகவல்களை முற்கூட்டியே அறிந்து கொள்வதால் கிடைக்கும் நன்மைகள் **நான்கு** தருக.

**(12 புள்ளிகள்)**

**06.1)** **வீடு** என்றால் என்ன?

**2)** வீடு ஒன்று அமைந்திருக்கக் கூடிய பல்வேறு நிலத்தோற்றங்களில், எவையேனும் **மூன்றினைத்** தருக.

**3)** தாவரங்களால் எமக்குக் கிடைக்கக்கூடிய பயன்கள் **நான்கு** தருக.

**(12 புள்ளிகள்)**

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல / விடை | வினா இல | விடை |
|---|---|---|---|
| 1 | 4 | 11 | பிழை |
| 2 | 1 | 12 | சரி |
| 3 | 2 | 13 | சரி |
| 4 | 2 | 14 | பிழை |
| 5 | 4 | 15 | பிழை |
| 6 | கிராம உத்தியோகத்தர் பிரிவு | 16 | C |
| 7 | மாலுமி | 17 | E |
| 8 | பாதரசம் | 18 | A |
| 9 | வளிமண்டலவியல் திணைக்களத்தினால் | 19 | D |
| 10 | தெளிவான | 20 | F |



Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination Geography Examination